# West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை

## வருடாந்திர மதிப்பாய்வுகள்



west sussex county council

## வருடாந்திர மதிப்பாய்வு என்றால் என்ன?

உங்கள் குழந்தையானது கல்வி உடல்நலம் மற்றும் கவனிப்புத் திட்டத்தின்கீழ் (EHC திட்டம்) இருந்தால், அந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி பலன்களைப் பெறுவதில் உங்கள் குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, உள்ளூர் நிர்வாக அமைப்பு குறைந்தது ஒவ்வொரு 12 மாதங்களுக்கு ஒருமுறை அதை மதிப்பாய்வு செய்ய வேண்டும், இதன் மூலமாகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பலன்களும் துணை இலக்குகளும் தொடர்ந்து பொருத்தமானதாக நீடிக்கிறதா என்றும் ஆராயப்படும். இந்தச் செயல்முறைக்கு வருடாந்திர மதிப்பாய்வு என்று பெயர். பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு, இந்த மதிப்பாய்வை குழந்தையின் தலைமை ஆசிரியர் நடத்துவார். இந்தச் சந்திப்புகள் பொதுவாக குழந்தையின் பள்ளியில், பகல் நேரத்தில் மேற்கொள்ளப்படும்.

குழந்தையின் வளர்ச்சியைப் பற்றி உங்களுக்கு ஏதேனும் கவலை ஏற்பட்டிருந்தால் அல்லது உங்கள் குழந்தை, பள்ளி மாற வேண்டியிருந்தால், வருடாந்திர மதிப்பாய்வை முன்கூட்டியே நடத்தலாம்.

கல்வி உடல்நலம் மற்றும் கவனிப்புத் திட்டத்தின்கீழ் உள்ள ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு, இந்த மதிப்பாய்வு ஆறு மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும்.

## ஏன் என் குழந்தைக்கு வருடாந்திர மதிப்பாய்வு செய்யப்படுகிறது?

இந்த மதிப்பாய்வு சந்திப்பின் நோக்கங்கள் பின்வருமாறு:

- உங்களுடைய, உங்கள் குழந்தையுடைய மற்றும் உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு உதவும் அனைவரின் கண்ணோட்டங்களையும் ஒருங்கிணைத்தல்,
- உங்கள் குழந்தைக்காகச் செய்யப்பட்டுள்ள சிறப்பு ஏற்பாடுகளை மதிப்பாய்வு செய்தல்
- முன்னதாக தீர்மானிக்கப்பட்ட இலக்குகள் எட்டப்படுகின்றனவா என்று உறுதிப்படுத்திக் கொண்டு, அடுத்த ஆண்டுக்கான புதிய இலக்குகளைத் தீர்மானித்தல்

- EHC திட்டம்/அறிக்கையில் சாத்தியமான திருத்தங்களைச் செய்வதற்குப் பரிந்துரைத்தல்
- ஒரு EHC திட்டம்/அறிக்கை தொடர்ந்து தேவைப்படுகிறதா என்று ஆராய்தல்

## பெற்றோர்களின் பங்கு

உங்கள் கருத்துகள் முக்கியமானவை, வருடாந்திர மதிப்பாய்வு செயல்முறையில் நீங்கள் கலந்துகொள்வது மிகவும் இன்றியமையாதது. கடந்த ஆண்டில் ஏற்பட்ட உங்கள் குழந்தையின் வளர்ச்சியைக் குறித்தும், குழந்தைக்கு அளிக்கப்படும் ஆதரவு அவர்களின் வளர்ச்சியில் உதவுகிறதா என்பது குறித்தும் உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள இதுவே உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்பாகும். சந்திப்பில் கலந்து கொள்வதற்கான அழைப்பு இரண்டு வாரங்களுக்கு முன்னதாகவே பள்ளியால் அனுப்பப்படும். அத்துடன் உங்கள் குழந்தையின் வளர்ச்சியைப் பற்றி நீங்கள் தெரிவிக்க விரும்பும் ஏதேனும் கருத்துகள் அல்லது தகவல்களை அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படும். நீங்கள் வழங்கும் தகவல்களும், உங்கள் குழந்தையுடன் அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மற்றவர்களின் அறிக்கைகளும் ஒன்றாகச் சேர்த்து விவாதிக்கப்படும்.

## குழந்தைகள் பங்கு

மதிப்பாய்வு செயல்முறையில் உங்கள் குழந்தையும் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ள வேண்டும், அது எல்லா அல்லது தேவையான வருடாந்திர மதிப்பாய்வு சந்திப்புகளிலும் கலந்து கொள்ள வேண்டும். நடைமுறையில் சாத்தியமாகும் நேரங்களில், உங்கள் குழந்தையிடம், அவர்களுடைய வளார்ச்சியைப் பற்றி என்ன நினைக்கின்றனர் என்றும், பிடித்த அல்லது பிடிக்காத விஷயங்கள் என்னென்ன என்றும் பொதுவாகப் பள்ளி குறித்தும் கேள்விகள் கேட்கப்படும். இது பொதுவாக ஒரு படிவத்தில் பதிவுசெய்யப்படும். இது உங்கள் குழந்தையுடன் சேர்ந்து நிரப்புமாறு உங்களுக்கு அனுப்பி வைக்கப்படலாம் அல்லது இந்தப் படிவத்தை பள்ளியில் பணியாளருடன் சேர்ந்தும் நிரப்பலாம். மதிப்பாய்வு செயல்முறையில் உங்கள் குழந்தையின் பங்கேற்பு எப்படியிருக்கும் என்பதைப் பற்றி உங்கள் பள்ளியுடன் பேச விரும்பலாம்.

## மதிப்பாய்வு சந்திப்பில் யாரெல்லாம் கலந்து கொள்வார்கள்?

பின்வரும் நபர்களைக் கண்டிப்பாக அழைக்க வேண்டும்:

- நீங்கள் – குழந்தையின் பெற்றோர் அல்லது இளம் நபர். சந்திப்புக்கு சென்று உங்கள் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் நீங்கள் உண்மையிலேயே பெரிய மாற்றத்தை உருவாக்கலாம். (நீங்கள் விரும்பினால் ஒரு நண்பர் அல்லது பிரதிநிதியையும் அழைத்து செல்லலாம்)
- பள்ளியைச் சேர்ந்த, உங்கள் குழந்தையைப் பற்றி அறிந்துள்ள ஒரு பிரதிநிதி
- ஒரு உள்ளூர் நிர்வாக அமைப்பின் பிரதிநிதி
- ஒரு உடல்நல சேவை மைய பிரதிநிதி
- உள்ளூர் நிர்வாகத்தின் சமூக கவனிப்பு பிரதிநிதி ஒருவர்
- தொடர்புடைய பிற நபர்களையும் அழைக்க வேண்டும்

அழைக்கப்படும் அனைவருமே மதிப்பாய்வு சந்திப்பில் கலந்து கொள்ள முடியாமல் போகலாம், ஆனால் உங்கள் குழந்தையுடன் அதிக தொடர்பு கொள்ளக்கூடிய நபர்களுக்கு வசதியாக இருக்கும்படி சந்திப்பின் தேதியை தலைமை ஆசிரியர் நிர்ணயிக்க முயற்சி செய்வார்.

## சந்திப்புக்கு முன்பு என்ன நடக்கும்?

பின்வரும் நபர்களிடமிருந்து அறிக்கைகளை எழுத்துவடிவில் ஆசிரியர் கண்டிப்பாகக் கேட்க வேண்டும்:

- நீங்கள் (நிரப்புவதற்கான படிவம் பள்ளியில் உங்கள் குழந்தையிடம் தரப்படும்)
- உங்கள் குழந்தையின் ஆசிரியர்கள்
- மதிப்பாய்வு சந்திப்பில் பங்கேற்க அழைக்கப்பட்ட மற்றவர்கள்

தலைமை ஆசிரியர் பின்வருவனவற்றை செய்ய வேண்டும்:

- மதிப்பாய்வு சந்திப்பு நடப்பதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னதாக, அதில் பங்கேற்க அழைக்கப்பட்ட அனைவருக்கும் அறிக்கைகளின் எழுத்துவடிவ நகலை அனுப்பி வைக்க வேண்டும்.
- கூடுதல் கண்ணோட்டங்களைக் கோரலாம், இதில் சந்திப்பில் பங்கேற்க முடியாத நபர்களிடமிருந்து கருத்துகளைப் பெறுவதும் அடங்கும்.

## உங்கள் அறிக்கையில் என்ன எழுதுவது?

பின்வருவன பற்றிய கருத்துகளைச் சேர்த்துக் கொள்வது உங்களுக்கு உதவும்:

- கடந்த ஆண்டில் குழந்தையின் மேம்பாட்டைப் பற்றிய உங்கள் பார்வைகள்
- எதில் சிறப்பாக இருக்கிறார், எதில் கவலைகள் உள்ளன என்று நீங்கள் கருதுபவை
- வரவிருக்கும் ஆண்டில், பள்ளியில் குழந்தையின் தேவைகளாக இருக்கக்கூடும் என்று நீங்கள் கருதுபவை
- அந்தத் தேவைகளை நிறைவேற்ற நீங்களும் பள்ளியும் செய்ய வேண்டியவை என்று நீங்கள் கருதுபவை
- குழந்தையின் மேம்பாட்டைப் பாதித்திருக்கும் என்று நீங்கள் உணரக்கூடிய ஏதேனும் முக்கியமான மாற்றங்கள் அல்லது நிகழ்வுகள்

படிவங்களை நிரப்புவதற்கு, அறிக்கைகளைப் பார்ப்பதற்கு மற்றும் உங்களுடன் சேர்ந்து வருடாந்திர மதிப்பாய்வு சந்திப்பில் கலந்து கொள்வதற்கு உங்களுக்கு உதவ, West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையைச் சேர்ந்தவர்களிடம் உதவி கோரலாம் என்பதை மறக்காதீர்கள்.

## என்னவெல்லாம் விவாதிக்கப்படும்?

உங்கள் குழந்தை அடைந்துள்ள மேம்பாட்டில் வருடாந்திர மதிப்பாய்வில் கவனம் செலுத்தப்படும். இதில் கடந்த ஆண்டு முழுவதும் அவர்கள் அடைந்துள்ள வெற்றிகள், தீர்க்க வேண்டிய ஏதேனும் சிக்கல்கள் போன்றவையும் அடங்கும். இதன்மூலம், இதில் ஈடுபட்டுள்ள அனைவரும், குழந்தைக்கு அளிக்கப்படும் துணை செயல்பாடுகளின் செயல்திறனை ஆய்வு செய்ய முடியும், மேலும் EHC திட்டம்/ அறிக்கை பொருத்தமானதா அல்லது ஏதேனும் திருத்தங்கள் தேவைப்படுகிறதா என்று தீர்மானிக்கவும் முடியும்.

EHC திட்டம்/ அறிக்கையின் இலக்குகள் மற்றும் பொதுவான இலக்குகளை உங்கள் குழந்தையின் மேம்பாடு எட்டுகிறதா என்று இந்த மதிப்பாய்வில் மதிப்பிடப்படும். சிறப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்கள் உட்பட, உங்கள் குழந்தைக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் சிறப்பு வசதிகளின் பலனளிப்பு திறனும் இதில் மதிப்பிடப்படும்.

இந்த விவாதங்களில் பெற்றோர் முழுமையாக பங்கேற்க வேண்டும். சந்திப்புக்கு முன்னதாகவே எல்லோருடைய அறிக்கைகளும் உங்களுக்கு அனுப்பப்படும், மேலும் கேள்விகள் கேட்கவும், கருத்துகளைக் கூறவும் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். உங்களுக்கு உதவ, தேவைப்பட்டால் கேட்க வேண்டிய கேள்விகள் அல்லது தெரிவிக்க வேண்டிய கருத்துகள் குறித்த பட்டியலை எடுத்துச் செல்லுங்கள். நீங்கள் விரும்பும் எந்தவொரு கேள்வியையும் கேட்கத் தயங்க வேண்டாம் அல்லது தேவைப்பட்டால் எதையேனும் மீண்டும் விளக்கிக்கூற வேண்டும் என்றாலும் கேட்கலாம். நீங்கள் விரும்பினால், நண்பர் அல்லது ஆதரவாளர் ஒருவரை கூட அழைத்துச் செல்லலாம் அல்லது West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவையிலிருந்தும் நபர்களைத் துணைக்கு அழைத்துச் செல்லலாம்.

## சந்திப்புக்குப் பிறகு என்ன நிகழும்?

சந்திப்பு முடிவடைந்த பிறகு, அதன் முடிவுகளைச் சுருக்கமாகத் தெரிவிக்கும் ஒரு அறிக்கையை பள்ளி தயாரிக்கும், அதில் வரவிருக்கும் ஆண்டிற்கான இலக்குகளும் வரையறுக்கப்படும். அந்த அறிக்கை, மதிப்பாய்வில் பங்கேற்ற அனைவருக்கும், சந்திப்பு முடிவடைந்த 2 வாரங்களுக்குள் அனுப்பி வைக்கப்படும்.

மதிப்பாய்வு சந்திப்பு முடிவடைந்த 4 வாரங்களுக்குள், உள்ளூர் நிர்வாக அமைப்பு, உங்கள் குழந்தையின் உடல்நல கவனிப்பு திட்டத்தை, தரப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் மதிப்பாய்வு செய்யும், பிறகு பின்வரும் முடிவுகளை எடுக்கும்:

- எந்த மாற்றங்களும் இல்லாமல் EHC திட்டம்/அறிக்கையை அப்படியே பராமரிப்பது
- EHC திட்டம்/அறிக்கையில் மாற்றங்கள் செய்வது
- EHC திட்டம்/அறிக்கையைப் பராமரிப்பதை நிறுத்துவது

உள்ளூர் நிர்வாக அமைப்பு, எல்லா முடிவுகளையும் கண்டிப்பாக உங்களிடமும் தலைமை ஆசிரியர் மற்றும் தொடர்புடைய மற்ற அனைவரிடமும் தெரிவிக்க வேண்டும்.

ஏற்கனவே உள்ள திட்டம், தொடர்ந்து பொருத்தமானதாக இருக்கும் என்று முடிவில் தெரியவந்தால், வரவிருக்கும் ஆண்டில் உங்கள் குழந்தைக்கான இலக்குகள் மற்றும் துணைசெயல்பாடுகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருக்கலாம்.

உள்ளூர் நிர்வாக அமைப்பு உங்கள் குழந்தையின் EHC திட்டம்/அறிக்கையில் மாற்றங்கள் செய்ய விரும்பினால், செய்யவிருக்கும் மாற்றங்கள் மற்றும் அவற்றுக்கான காரணங்களை உங்களுக்கு அவர்கள் எழுத்துவடிவில் தெரிவிப்பார்கள். அந்த மாற்றங்களைப் பரிசீலிக்க உங்களுக்கு குறைந்தது 15 நாட்கள் தரப்படும்.

இறுதிசெய்யப்பட்ட EHC திட்டத்தை வெளியிடுவதற்கு அல்லது திருத்தங்களை செய்யாமல் விடுவதற்கு, மதிப்பாய்வு சந்திப்பு முடிவடைந்த பிறகு 8 வாரங்கள் வரை உள்ளூர் நிர்வாக அமைப்பிற்கு கால அவகாசம் இருக்கும். முடிவை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், இதனுடன் தொடர்புடைய உள்ளூர் நிர்வாக

அமைப்பு அதிகாரியுடன் அதைப் பற்றி விவாதிக்கலாம்.

சில சூழல்களில், உள்ளூர் நிர்வாக அமைப்பு, EHC திட்டம்/அறிக்கையின் இலக்குகள் எட்டப்பட்டு விட்டதாக முடிவெடுத்து, திட்டத்தைப் பராமரிப்பதை நிறுத்தத் தீர்மானிக்கலாம். கல்வி உடல்நலம் மற்றும் கவனிப்புத் திட்டம் வழங்கும் கூடுதல் உதவிகள் குழந்தைக்கு இனியும் தேவைப்படாது என்ற நிலையில் மட்டுமே இந்த முடிவு எடுக்கப்படும். இதுபோன்ற நிலைகளில், பள்ளியானது ‘SEN ஆதரவு’ மூலமாக உங்கள் குழந்தைக்குத் தொடர்ந்து ஆதரவு வழங்கும்.

உங்கள் குழந்தையின் கல்வி உடல்நலம் மற்றும் கவனிப்புத் திட்டம்/அறிக்கையில் செய்யப்படும் ஏதேனும் மாற்றங்களை நீங்கள் ஏற்கவில்லை என்றால், நாட்டின் சார்பற்ற நடுவர் சேவையை அணுகும் உரிமை உங்களுக்கு உண்டு மற்றும்/அல்லது சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் உடல்குறைபாடு தீர்ப்பாயத்தில் (SEND Tribunal) முறையிடலாம். கூடுதல் விவரங்களை, West Sussex SEND தகவல், ஆலோசனை மற்றும் ஆதரவு சேவை மையத்தை 0330 222 8555 என்ற எண்ணில் அழைத்து அறிந்து கொள்ளலாம்.

## சிறப்பு ஏற்பாடுகள்

ஆண்டுகள் 5/6 – 5வது ஆண்டில் செய்யப்படும் வருடாந்திர மதிப்பாய்வில், உங்கள் குழந்தையை ஆரம்ப பள்ளியில் இருந்து மேல்நிலை பள்ளிக்கு மாற்றுவதும் கருத்தில் கொள்ளப்படும், அதனால் கிடைக்க கூடிய வாய்ப்புகளைப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பும் திட்டமிடுவதற்கான நேரமும் இருக்கும். 5வது ஆண்டுக்கான மதிப்பாய்வு கோடை காலத்தில் நடத்தப்பட வேண்டும், அப்போதுதான் பள்ளி மாறும் வருடத்தின் பிப்ரவரி 15ஆம் தேதிக்குள் கல்வி உடல்நலம் மற்றும் கவனிப்புத் திட்டத்தை மாற்றியமைத்து வெளியிட முடியும். பள்ளியின் சிறப்புக் கல்வித் தேவைகள் ஒருங்கிணைப்பாளர் (SENCo) 5ஆம் ஆண்டு மற்றும் 6ஆம் ஆண்டு மதிப்பாய்வில் கலந்து கொள்ள அழைக்கப்படலாம்.

## நிலைமாறுதல் மதிப்பாய்வு என்றால் என்ன?

9ஆம் ஆண்டு மற்றும் அதற்கு பிந்தைய ஆண்டுகளில், வருடாந்திர மதிப்பாய்வில் உங்கள் குழந்தையின் நிலைமாறுதல் தொடர்பான தேவைகளும் இடம்பெற வேண்டும். மேலும் வழக்கமான வருடாந்திர மதிப்பாய்வு அறிக்கையுடன் நிலைமாறுதல் திட்டம் ஒன்றும் கண்டிப்பாக வழங்கப்பட வேண்டும். அதன் பிறகு, குழந்தை பள்ளியிலிருந்து வெளியேறும் வரை, நிலைமாறுதல் திட்டத்தை, ஒவ்வொரு வருடாந்திர மதிப்பாய்விலும் புதுப்பித்து வழங்க வேண்டும். இந்த மதிப்பாய்வில் பின்வருவன அடங்கும்:

**பள்ளி**, உங்கள் குழந்தைக்கு துணை புரிய தற்போது வழங்கப்பட்டு வரும் பள்ளியின் வழங்குதல் தொடர்பான தகவல்களை வழங்க வேண்டும்.

**நீங்களும் உங்கள் குடும்பத்தினரும்,** உங்கள் குழந்தை பள்ளியிலிருந்து வெளியேறிய பிறகு, குழந்தைக்கு என்ன தேவைப்படும் என்பது குறித்த உங்கள் கருத்துகள், மேலும் ஒரு வளர்ந்த நபராக குழந்தை நடந்து கொள்வதற்குத் தேவைப்படும் தனிப்பட்ட மற்றும் சமூக திறன்களை மேம்படுத்த நடைமுறையில் என்ன உதவி தேவைப்படும் என்பதையும் கலந்துரையாட வேண்டும்.

**உங்கள் குழந்தை**, தன்னுடைய தேவைகளைப் பற்றியும், பள்ளியிலிருந்து வெளியேறிய பிறகு அவர் என்ன செய்ய விரும்புகிறார் என்பதைப் பற்றியும் கூற வேண்டும்.

**(11ஆம் ஆண்டு முதல்) தொழில் வாழ்க்கை ஆலோசகர்**, நிலைமாறுதல் திட்டம் சரியாக நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு பொறுப்பானவர்.

சூழ்நிலைகளைப் பொறுத்து, பின்வரும் சேவைகளும் இடம்பெறலாம்:

**சமூக கவனிப்பு சேவைகள்**, உடல் குறைபாடுடைய நபர்களுக்கான சட்டம் 1986 (Disabled Persons Act 1986) இன்படி ஏதேனும் மதிப்பீடுகளுக்கு ஏற்றபடி ஏற்பாடுகள் செய்யப்படுவதற்கு அல்லது குழந்தை பொது கவனிப்பின் கீழ் இருந்தால் அல்லது ‘உதவி தேவைப்படும் குழந்தையாக’ இருந்தால்.

**உடல்நலச் சேவை**, தேவைப்படக் கூடிய ஏதேனும் உடல்நலச் சேவைகள் தொடர்பான ஆலோசனை வழங்குவதற்கு.

## எங்களைத் தொடர்பு கொள்ள

**உதவி எண்:**

0330 222 8555

**அஞ்சல் முகவரி:**

SEND Information, Advice and Support Service

St James Campus

St James Road

Chichester

West Sussex

PO19 7HA

**மின்னஞ்சல் முகவரி:** send.ias@westsussex.gov.uk

**எங்கள் இணையதளங்களையும் நீங்கள் பார்க்கலாம்:**

https://westsussex.local-offer.org/services/7

**SEND** = சிறப்புக் கல்வித் தேவைகள் மற்றும் உடல்குறைபாடு (Special Educational Needs and Disabilities)

எல்லா பெற்றோருக்கும் பாகுபாடற்ற தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவு சென்று சேர்வதை உறுதிப்படுத்துவதே WS SEND IAS இன் பங்காகும், இதன் மூலம் பெற்றோர், தங்கள் குழந்தையின் சிறப்புக் கல்வித் தேவைகளைப் பற்றிய தகவல் அறிந்த முடிவுகளை எடுக்க முடியும். பாதிப்பு உடைய குடும்பங்களுக்கு அவர்களுடைய சூழல்களில் உதவக்கூடிய தனிநபர்கள், சேவைகள் அல்லது ஏஜென்சிகளுடன் பகிர்ந்து கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டால் தவிர WS SEND IAS உடன் பகிர்ந்து கொள்ளப்படும் தகவல்கள் ரகசியமாகவே வைக்கப்படும்.

west sussex county council

www.westsussex.gov.uk

WS187(5) 09.15

TAMIL